### பசுமை சைதை சார்பில் புயல் காரணமாக சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக

# 5000 மரக்கன்றுகளை நடும் பணி பருவத்தே பயிர் செய்யும் முயற்சி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!




**சென்னை, டிச. 22–**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத் தளப் பதிவு வருமாறு:**

காலநிலை மாற்றத்தை உலகளாவிய கூட்டு நடவடிக்கையின் வழியாக மட்டுமே எதிர் கொள்ள முடியும். அதுவே தீர்வாகும்!

இந்த விழிப்புணர்வுடன், ஆறு ஆண்டுகளுக்கு முன்பே என்னால் தொடங்கி வைக்கப்பட்டு, 1 லட்சத்து 10 ஆயிரம் மரங்களை நட்டுப் பராமரித்து வரும் பசுமை_சைதை சார்பில் Cyclone Michaung காரணமாகச் சேதமடைந்த மரங்களுக்கு ஈடாக 5000 மரக்கன்றுகளை நடும் பணி 'பருவத்தே பயிர் செய்யும்' முயற்சி!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.




தூத்துக்குடி குடியிருப்பு பகுதியில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று காலை கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நல திட்ட உதவிகளை வழங்கினார்.



பல்லாவரம் மறைமலை அடிகளார் அரசு மேல்நிலைப் பள்ளியில் 2023–24 ஆம் ஆண்டின் 1783 மாணவ–மாணவியர்களுக்கு ரூ.86 இலட்சம் மதிப்புள்ள விலையில்லா மிதி வண்டியினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் மாணவ – மாணவிகளுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல்நாத் , பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அழகுமீனா, துணை மேயர் காமராஜ், பகுதி செயலாளர்கள் வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சொ.கற்பகம், உள்ளாட்சி பிரதிநிதிகள், பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் பள்ளி மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடி மாவட்டம் - ஏரல் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

# கனிமொழி கருணாநிதி எம்.பி. படகில் சென்று நிவாரணம்!

## இரு சக்கர வாகனத்திலும் சென்று ஆறுதல்!

தூத்துக்குடி, டிச. 22 -

ஏரல் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு படகிலும் பைக்கிலும் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார் கனிமொழி கருணாநிதி எம்.பி. தூத்துக்குடி உள்ளிட்ட தென்மாவட்டங்களில் பெய்த அதிகன மழையால், மாவட்டத்தில் பெரும்பாலான பகுதி களில் வெள்ள நீர் சூழ்ந்து, மக்களின் இயல்பு வாழ்க்கைப் பாதித்தது.

இந்த நிலையில், வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளுக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக் குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் தொடர்ந்து மீட்புப் பணி மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்.

நேற்று முன்தினம் (20.12.2023) ஏரல் பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தேசிய பேரிடர் மீட்புப் படையினருடன் இணைந்து படகில் பயணித்து, மக்களை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டு அறிந்தார்.

மேலும், வாக்கி டாக்கி மூலம் பிரச்சினையின் தீவிரத்தை அரசு அதிகாரிகளுக்கு உணர்த்தி பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர், பால், பிஸ்கட், குழந்தைகளுக்கான பால் பவுடர் மற்றும் சமைக்கத் தேவைப்படும் அரிசி, பருப்பு, காய்கறிகள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் வேண்டும் என்று கோரினார்.

அதனைத் தொடர்ந்து, மீட்புப் படையினர் கனிமொழி கருணாநிதி எம்.பி.கோரிய நிவாரணப் பொருட்களைப் படகில் கொண்டு சேர்த்தனர்.

பின்னர், கனிமொழி கருணாநிதி அவர்கள் மக்கள் கோரிய உணவு, தண்ணீர், பால் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கி, வாழ்வாதாரத்தை இழந்த மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். ஏரல் சுற்றியுள்ள கிராமங்களுக்கு டூவீலரில் சென்று நிவாரணப் பணிகளில் ஈடுபட்டார்.


